# இடம் பொருள் கலைஞர்

84

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம்
நில உச்சவரம்புச் சட்டம்!



# நில உச்சவரம்புச் சட்டம்!

## பண்ணை ஆதிக்கத்துக்கு சம்மட்டி அடி!

‘நிலம்...’ ‘உலகம் முழுக்க உழுபவனுக்குச் சொந்தம்’. ஆனால், இந்தியாவில் மட்டும் ‘பண்ணைகள்’ என கூறப்படும் ஆண்டைகளுக்குச் சொந்தம். சாதிய ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதில் முதன்மையாய் நின்றது நிலம். உயர் சாதியினர் இடத்தில்தான் பல்லாயிரம் ஏக்கர்கள் கொட்டிக் கிடந்தன. பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் ஒருசில ஏக்கர் இருந்தாலே அது ஆச்சரியம். காலனிய ஆட்சிக்காலம் வரை மட்டுமல்ல, கழகம் ஆட்சிக்கு வரும்வரை அதுதான் நிலைமை. வரப்பே கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு ஐநூறு, ஆயிரம் ஏக்கர்களுக்கு ஒருவரே உரிமையாளராக இருப்பதும், அவரிடத்திலே நூற்றுக்கணக்கானோர் பண்ணை அடிமைகளாக இருப்பதும் அரைநூற்றாண்டுக்கு முன்புவரை சாதாரணமாக நீடித்திருந்தது.

நில உடைமையாளர்களிடம் கூலி அடிமைகளாக கீழ்ச்சாதி அடுக்கில் இருந்த மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு வந்தனர். பண்ணையார்கள் கொடுக்கும் சிறிய இடங்களில்தான் விவசாயக் கூலிகள் கொட்டகை அமைத்துத் தங்கிக் கொண்டு இருந்தனர். உழைக்க மறுத்தாலோ, கூலி உயர்வு கேட்டாலோ அந்த இடத்தில் இருந்தும் விரட்டப்பட்டு, வாழ்வாதாரத்தை இழக்கும் கொடுமைகள் நிகழ்ந்ததை வரலாற்றுத் தரவுகளில் காணமுடியும். பொருளாதார ஏற்றத் தாழ்விலிருந்தும், சமூக ஏற்றத் தாழ்விலிருந்தும் அம்மக்களுக்கான விடுதலையைத் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தது காலம்.

### காங்கிரஸ் இயற்றிய முதல் சட்டம்

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலேயே நிலவுடைமை ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த இயக்கம் காங்கிரஸ். ஆனால், இந்திய விடுதலைக்குப் பின்னர் காங்கிரஸ் ஆளும் மற்ற மாநிலங்களில் எல்லாம் நில உச்சவரம்புச் சட்டம் அமலாகிக் கொண்டிருக்க, தமிழ்நாடு மட்டும் 13 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்த காத்திருத்தல் இறுதியில் பெரும் ஏமாற்றத்தில் முடிந்தது. நில உச்சவரம்புச் சட்டம் வரப்போகிறது, வரப்போகிறது என்ற செய்திகள், அரசல் புரசல்களாக வந்துகொண்டே இருந்தன. நிலக்கிழார்கள் அனைவரும் சுதாரித்துக் கொண்டனர்.

1959-ஆம் ஆண்டு கபிஸ்தலம் பண்ணையின் மொத்த நில அளவு 2,028 ஏக்கர். அதில் 1,464 ஏக்கரைப் பிரித்து விற்பனை செய்துவிட்டார். மீதமிருந்த 389 ஏக்கர் தரிசு நிலம் என்று அறிவிக்கப்பட்டு விட்டது. 125 ஏக்கர் அறக்கட்டளை நிலமாக மாற்றப்படுகிறது. எனவே, காங்கிரஸ் ஆட்சி கொண்டுவந்த 30 ஏக்கர் ஸ்டாண்டர்டு நில உச்சவரம்புச் சட்டத்தால் கபிஸ்தலம் பண்ணையாரிடம் இருந்து அரசுக்கு உபரியாகக் கிடைத்தது 4 ஏக்கர் 84 சென்ட் மட்டுமே. அதேபோல, பூண்டிப் பண்ணையின் மொத்த நில அளவு 4,000 ஏக்கர். ஆனால், நில உச்சவரம்புச் சட்டத்தில் அரசுக்கு உபரியாகக் கிடைத்த நிலம் 48 ஏக்கர் மட்டும்தான். இதே வழியைத்தான் அனைத்துப் பண்ணைகளும் பின்பற்றினார்கள். அதனால்தான் அறிஞர் அண்ணா இதை நில உச்சவரம்புச் சட்டம் என்று கூறாமல், ‘மிச்ச வரம்புச் சட்டம்’ என்று கிண்டலடித்தார்.

### ஆதிக்கத்திற்கு வைக்கப்பட்ட வேட்டு

காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நில உச்சவரம்புச் சட்டம் வந்த பின்பும் கூட, சாதியும் நிலமும் சேர்ந்து இரட்டைச் சுவர் போல ஆண்டைகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டுதான் இருந்தன. சிறு கீறல் கூட விழாத அந்த சுவற்றையே அடித்து நொறுக்குவது போல 1970-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நில உச்சவரம்புச் சட்டத்தை இயற்றினார் கலைஞர். இயற்றப்பட்டது சட்டம் அல்ல, இடி... பன்னெடுங்கால ஆண்டான் அடிமைத்தனத்தை முடிவுகட்ட இறங்கிய பேரிடி. முன்கூட்டியே யாருக்கும் சொல்லப்படவில்லை, பண்ணைகள் சுதாரித்துக் கொள்ளவும் இல்லை. 30 ஸ்ண்டார்டு ஏக்கர் உச்சவரம்பு என்பதை 15 ஏக்கராகக் குறைத்தார் கலைஞர்.

பண்ணையார்கள், நிலக்கிழார்கள், மடாதிபதிகளிடம் இருந்த 1,08,068 ஏக்கர், உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டன. அதில் 88,146 ஏக்கரை அரசு கையகப்படுத்தியது. நிலமற்ற 38,504 ஏழை விவசாயிகளுக்கு 62,682 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டன. நில உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றச் செய்தார் கலைஞர்.

ஆனால், 1960-இல் கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டத்தில் 24,194 உபரியாக அறிவிக்கப்பட்டு, 16,330 ஏக்கர் மட்டுமே கையகப்படுத்தப்பட்டது. விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படவே இல்லை.

அப்போது நிலக்கிழார்கள் சாமர்த்தியமாக, தங்களது நிலங்களை அறக்கட்டளைகளுக்கு மாற்றிக் கொண்டனர். அறக்கட்டளைகள் சட்டத்தில் இருந்த ஒரு பிரிவு, அறக்கட்டளையில் உள்ள நிலங்களை நில உடைமையாளர்களே வைத்துக் கொள்ளலாம்; ஆனால், நேரிடையாக விவசாயம் செய்ய முடியாது. குத்தகைதாரர் மூலம்தான் விவசாயம் செய்யலாம் என்கிற குறுக்கு வழியைக் கண்டுபிடித்து, நில உச்சவரம்பு நோக்கத்தையே சிதைத்தனர்.

அதற்கும் முற்றுப்புள்ளி வைத்தார் கலைஞர். ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு, எந்தெந்த அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டனவோ, அந்த அறக்கட்டளையில் இருக்கும் நிலங்கள் எல்லாம், மீண்டும் யார் நிலவுடைமையாளரோ அவரிடம் சென்றுவிடும். அதன் பிறகு, நில உச்சவரம்புச் சட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன் வழியாக அந்த நிலங்கள் கைப்பற்றப்படும், என்றும் சட்டத்தைக் கொண்டு வந்தார். இந்தச் சட்டத்திருத்தத்துக்கு எதிர்ப்பு வந்தது.

அதை சமாளித்து, நில உச்சவரம்புச் சட்டத்தில் உறுதியாக நின்ற கலைஞர், அறக்கட்டளை நிலங்களுக்கு உச்சவரம்பு என கொண்டு வந்ததுடன், குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டத்தை வலுவாக்கி, குத்தகை நிலங்களில் விவசாயம் செய்து வருபவர்களுக்கு அந்த நிலம் உரிமையாக்கப்படும் என கொண்டு வந்தார். அதற்காக குத்தகைதாரர் ஆவணங்கள் பதிவதில், வாய்மொழியான தரவுகளைக்கூட பதியலாம் என எளிமையாக்கினார். அதன்மூலம், அந்த நிலங்களில் இருந்து அவர்களை வெளியேற்ற முடியாத பாதுகாப்பை உருவாக்கினார். இப்படியாக தமிழ்நாட்டில், பெரு நில உடைமையாளர்களின் பிடியைத் தளர்த்தினார் கலைஞர். கிராமங்களில் அவர்களின் அதிகாரம் வீழ்ச்சி அடைய நில உச்சவரம்புச் சட்டம் வழி செய்தது.

### இந்தியா முழுவதும் பாராட்டை ஈர்த்த திட்டம்

காங்கிரஸ் ஆட்சியில் நில உச்சவரம்புச் சட்டம் வருவதற்கு முன்பாகவே இதுதொடர்பாக சட்டமன்றத்தில் தனிநபர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால், அப்போது கலைஞர் கருத்துரை வழங்கும்போது சட்டசபை கலைந்ததால், கலைஞர் பேச்சை பாதியில் முடித்துக்கொண்டார். ஆனால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு, எந்தவிதமான எதிர்ப்புக்கும் இடமில்லாமல் நில உச்சவரம்புச் சட்டத்தை இயற்றினார் கலைஞர். எல்லா விதமான எதிர்ப்புகளையும் சமாளித்து, கலைஞரின் இந்தப் புரட்சிகரமான நிலச்சீர்திருத்தப் பணிகளைக் கண்டு வியந்துபோனது இந்தியத் துணைக்கண்டம். அதிலும் குறிப்பாக புதுடெல்லியில் இருந்து வந்த இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் ஒரு நிலச் சீர்திருத்த ஆய்வுப் பிரிவு, இந்தியாவிலேயே நில உச்சவரம்பில் நிலச் சீர்திருத்த பணியில் தமிழ்நாடுதான் முன்னணியில் உள்ளது என்று பாராட்டியது.

**எல்லா விதமான எதிர்ப்புகளையும் சமாளித்து, கலைஞரின் இந்தப் புரட்சிகரமான நிலச்சீர்திருத்தப் பணிகளைக் கண்டு வியந்துபோனது இந்தியத் துணைக்கண்டம்.**

ஆண்டைகளின் வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டுமென்பதல்ல, கலைஞரின் நோக்கம், அடிமைத்தனத்தில் இருப்போரை விடுவிக்க வேண்டுமென்பதே அவர் நோக்கம். அந்த நோக்கம் நிறைவேறியது, நிலம் உழுபவனுக்குச் சொந்தமானது.

...வலம் வருவோம்

## ஒன்றியத்தின் மாற்றாந்தாய் மனப்பான்மை!

“சூத்திரர்களுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே” என்றது ஆரியம். “தமிழ்நாட்டு மக்களுக்கு சுயேச்சையான கல்வி உரிமையைத் தரமாட்டோம்” என்கிறது ஒன்றிய அரசு.

ஒன்றிய அரசின் சார்பில், வெளியிடப்படும் புள்ளிவிவரங்களாக இருந்தாலும், தனியார் நிறுவனங்களின் சார்பில் வெளியிடப்படும் ஆய்வறிக்கைகளாக இருந்தாலும், கல்வி வளர்ச்சியில் தன்னிகரற்ற வளர்ச்சியைப் பெற்றுள்ளது தமிழ்நாடு என்பது உலகமே அறிந்த உண்மை. உயர்கல்வித்துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு. சமீபத்தில், ஒன்றிய அரசு வெளியிட்ட தரம் வாய்ந்த தேசியக் கல்வி நிறுவனங்களில் பல முக்கிய இடங்களைத் தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களே பிடித்துள்ளன. மேலும் திராவிட மாடல் அரசின் ‘புதுமைப்பெண்’, ‘தமிழ்ப்புதல்வன்’ போன்ற திட்டங்களால் கல்வி வளர்ச்சி மேலும் அதிகரிக்கும். ஆனால், தமிழ்நாடு அப்படி முன்னேறக்கூடாது என்ற அடிப்படையில்தான் பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போடுகிறது ஒன்றிய அரசு.

ஏழை எளிய அடித்தட்டு மாணவர்களின் மருத்துவக் கனவைப் பறிக்கும் நீட் தேர்வைத் தொடர்ந்து உறுதியாக எதிர்த்து வருகிறது தமிழ்நாடு அரசு. அதேபோல் மும்மொழிக் கொள்கையையும் குலக்கல்வியையும் திணிக்கும் தேசிய கல்விக்கொள்கையை எதிர்க்கும் தமிழ்நாடு அரசு, அதற்கு மாற்றாக மாநில கல்விக்கொள்கையை முன்வைக்கிறது. ஆனால், புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு நிராகரித்து வருவதால், பள்ளிகளுக்கு வழங்க வேண்டிய ரூ.573 கோடி நிதியை நிறுத்தி வைத்துள்ளது ஒன்றிய அரசு.

‘சர்வ சிக்ஷா அபியான்’ என்ற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளிகளுக்கு ஜூன் மாதத்திற்கு வழங்க வேண்டிய மத்திய அரசின் தொகுப்பு நிதியை தற்போது வரை தராமல் நிறுத்தி வைத்துள்ளது ஒன்றிய அரசு. இதனால் சுமார் 15,000 ஆசிரியர்களுக்கு செப்டம்பர் மாதத்திற்கான சம்பளம் வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் கல்வி உரிமைச் சட்டத்தில் சேர்ந்துள்ள மாணவர்களின் கல்விக் கட்டணத்தை தனியார் பள்ளிகளுக்கு தமிழ்நாடு அரசால் செலுத்த முடியாமல் உள்ளது.

தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தும் ஒன்றிய அரசின் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்





துரை.நெப்போலியன்

### கலைஞருடன் கழகக் குடும்பம்!

என் தந்தை ஜே.எஸ். துரையப்பன், தீவிர கழகப் பற்றுக் கொண்டவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்றவற்றில் பங்கேற்று சிறை சென்றவர். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் என்னுடைய மூத்த சகோதரருக்கு, ‘தமிழ்ச்செல்வன்’ என்று பெயர் சூட்டினார். 1971-ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒருங்கிணைந்த மதுரை மாவட்டம், கம்பம் வ.உ.சி. திடலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார். அப்போது, என் தந்தை அவர்கள் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து நிதி வழங்கி, எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

– **துரை.நெப்போலியன், வழக்கறிஞர், கம்பம், தேனி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கொள்கை முழக்கம்!

1954-ஆம் ஆண்டு, சென்னை, இராயப்பேட்டையில், ‘முத்தமிழ் முன்னேற்ற மன்றம்’ சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டத்தில் பேசினார் பேரறிஞர் அண்ணா. கழகத்தின் மீது, அப்போது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கும் வகையில், “திராவிட முன்னேற்றக் கழகம் யாருக்கும், எப்பொழுதும் கை ஆள் ஆக ஆகாது. அதனிடத்திலே சில திட்டவட்டமான கொள்கைகள் இருக்கின்றன. யார் அதை மிரட்டினாலும் மிரட்டும்போது அது மிரள்வதில்லை, ஆசை காட்டும்போது அதிலே அது மயங்கி விடுவதுமில்லை என்பதை, இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்” என அவரது உரை, கொள்கை முழக்கமாகவே இருந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

584

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.